செய்திவெளியீடு **நாள் :04.11.2025**

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்தும், முடியும் தருவாயில் உள்ள பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் விரைவில் திறப்பது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்று (4.11.2025) திரு.வி.க நகர் 6வது மண்டல அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் **கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்தும், தற்போதைய பணிகளின் நிலை குறித்தும் மற்றும் முடியும் தருவாயில் உள்ள பணிகளை விரைவில் திறப்பது** குறித்தும் அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிஎம்டிஏ முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம் இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் திரு.பொ.குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, சென்னை குடிநீர் தலைமைப் பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம், செயற்பொறியாளர்கள் திரு.சதீஷ், திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate